
## *பாவேந்தர் பாரதிதாசன்!*



தமிழாய் தமிழில் என்றும் நிறைந்தவன்!
அமிழ்தாய் பாக்கள் பலவும் செய்தவன்!
இனிய சந்தங்களில் சிந்தும் பாடியவன்!
அணியாய்த் தமிழில் ஆன்றநறுங் காப்பியங்கள்!

மணியாய் மாமனிதன் செய்த **குடும்ப விளக்கு!**
இனிதாய்ப் **பொன்னடி**யும் புகழ்சூட்டத் தொடங்கி,
அணியாய் **தமிழ்க் கவிஞர் மாமன்றம்** கண்டோம்!
கனியும் காயுமாய் கற்கண்டு சுவையிலும் கவிபடைக்க,

கவிஞர் தாமும் கனிவாய்க் கூடும் **கடற்கரை அரங்கு**!
புவியில் பிறந்தோரைப் புதுப் பொலிவாக்கி மகிழ்ந்தார்!
செவியில் நிறைந்த சிந்தையெல்லாம்கவிதையாகிட,
குவியும் அறிவைக் கோத்தே நிறைந்து ஏற்றுவோம்!

**கவிவளவன்** ஆகிய கு.ப. அசோகன்,
29-04-2023 (காலை 7.45 மணி)





